# தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2012

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காக இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய திரைப்பட வரி உதவு தொகையான ரூபா 1,812,385 வருமானமாகக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், கடன்கொடுத்தோர் கணக்கில் பிரதிபலித்த திரண்ட வருமானமான ரூபா 10,918,258 திரண்ட வருமானக் கடன்பட்டோர் கணக்கில் பிரதிபலித்த ரூபா 18,851,444 உடன் இணங்கவில்லை.

#### 1.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரைப்படத் தயாரிப்புக் கடன் மீதி ரூபா 64,682,582 ஆனதுடன் அம் மீதியில் 99.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குறிக்கும் ரூபா 64,554,331 ஏழு ஆண்டுகளுக்கு மேற்பட்டனவாகும். 2012 ஆம் ஆண்டில் திரைப்படம் ஒன்றை விற்பனை செய்தமையால் பெற்ற ரூபா 5,000,000 நீங்கலாக வேறெந்தக் கடன் மீதியும் அறவிடப்படவில்லை. அத்திரைப்படத் தயாரிப்பிற்காக வழங்கிய கடனுக்கு வட்டியாக அறவிடப்படவேண்டிய தொகையாகக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 3,933,662 வட்டியானது திறைசேரியின் அங்கீகாரமின்றி கணக்கில் அகற்றப்பட்டிருந்தது. அறவிடப்பட

முடியாத திரைப்பட உற்பத்திக் கடன் மீதியாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 60,739,558 அல்லது 94 சதவீதம் ஆகும்.

(ஆ) திரைப்பட அபிவிருத்தி நிதியத்தைப் பேணுவதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்களிலிருந்து திரைப்படக் கூட்டுத்தாபனம் அறவிட வேண்டிய கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பில் 20 சதவீதம் நிதியத்திற்கு வழங்கப்பட்டபோதும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியம் பெறவேண்டியிருந்த திரைப்பட வரி உதவுதொகை ரூபா 18,851,444 ஆகும்.

(இ) பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பாக 5 சினிமா அரங்குகளுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் அவற்றிற்குரிய வட்டியில் 2012 ஜனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா 14,710,994 ஆகும். அதில் தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் நிதியம் திருப்பிப் பெற்ற தொகை ரூபா 2,068,596 அல்லது 14 சதவீதமாக இருந்தது. ஒரு சினிமா அரங்கிலிருந்து கடன் தவணைப் பணம் எதுவுமே அறவிடப்படவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயத்திற்குமெதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பெறவேண்டிய திரைப்பட தயாரிப்பு வருமானத்தின் - ஆரம்ப மீதி | 2,537,597 | கொடுப்பனவு செய்ய வேண்டிய திரைப்படத் தயாரிப்பு கணக்கின் ஆரம்ப மீதிக்குரிய பட்டோலை |
| (ஆ) | பெறவேண்டிய திரைப்பட தயாரிப்பு வருமானக் கணக்கில் வரவு வைத்தல் | 163,141 | 2009 ஆம் ஆண்டிற்கான தவறுகளைத் திருத்தத்திற்கான நாட்குறிப்பினது பிழையற்ற தன்மையை உறுதிசெய்யக்கூடிய சான்று |
| (இ) | பெறவேண்டிய திரைப்பட தயாரிப்பு வருமானக் கணக்கிற்காக செலவு பதிவு | 15,463 | 2008,2010 ஆம் ஆண்டுகளிற்கான பதிவழிப்பு பதிவுகளின் பிழையற்ற தன்மையை உறுதிசெய்யக் கூடிய சான்று |

## 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1996 ஒக்டோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க திரைப்பட அபிவிருத்தி நிதியம் தொடர்பான வர்த்தமானி | |
| | கட்டளை இலக்கம் 6(இ) | வழங்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தப்படுவதில் தாமதம் நிலவினால் அவற்றின் அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் நிச்சயிக்கப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | நி.பி 71(1)(அ) மற்றும் 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கை | தலைவருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் மாதாந்தம் வழங்கப்படும் ரூபா 19,250 படியானது பொது நிர்வாக அமைச்சின் செயலாளரது இசைவுடன் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல், கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. |
| (இ) | 2000 ஜுன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கை | 2000 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட நிலையான வைப்பாகிய ரூபா 2,000,000 மற்றும் 2012 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட ரிபோ வைப்பாகிய ரூபா 1,500,000 என்பவற்றிற்குத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகள் வரிக்கு முன்னரான ரூபா 4,996,573 மிகையை விளைவித்திருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான பற்றாக்குறை ரூபா 3,628,437 உடன் ஒப்பிடுகையில் வரிக்கு முன்னரான மிகையில் ரூபா 8,625,010 அல்லது 237 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட ரூபா 1,795,082 அதிகரிப்பு மற்றும் நட்டக் கடனுக்கான நிதியேற்பாட்டில் ஏற்பட்ட ரூபா 5,128,020 குறைவு என்பன மீளாய்வாண்டினது மிகை அதிகரிப்பிற்குக் காரணிகளாக அமைந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட இயலாத 6 சந்தர்ப்பங்களின் மூலம் ரூபா 4,028,000 வரவு வைக்கப்பட்டும் ரூபா 1,874,142 செலவு வைக்கப்பட்டும் மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 2,153,858 ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1994 ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளைத் தொகுப்பின் 4 ஆம் இலக்கப் பிரமாணத்தின் கீழ் (அ) தொடக்கம் (ஓ) வரையிலான அபிவிருத்தி நிதியத்தின் கடமைகளில் எதுவுமே 2012 ஆம் ஆண்டின்போது நிறைவேற்றப்படவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் தயாரிக்கப்பட்ட திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட திரைப்படம் ஒன்றிலிருந்து 2005 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,547,454 திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திரை அரங்கு ஒன்றிற்கு வழங்கிய ரூபா 2,355,959 தொகை கடன் தவணைப் பணம் மற்றும் அதற்கான வட்டி அறவிடப்படுவதற்கு எதுவித சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படாது மொத்தத் தொகையும் அறவிடப்பட முடியாததாக மதிப்பிடப்பட்டு கடன்பட்டோர் மீதியிலிருந்து அதனைக் கழித்து நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அக்கடன் தொகையானது குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்தியாவின் தனியார் இரசாயனக்கூடம் ஒன்றுடன் இணைந்து 2007 ஆம் ஆண்டில் திரைப்படம் ஒன்றை தயாரிப்பதற்கு செய்வதற்குத் திட்டமிட்டு ஆரம்பச் செலவினமாக ரூபா 200,000 செவழித்து, தயாரிப்பாளர் ஒருவரைத் தேட முடியாமையால் தயாரிப்பை கைவிட்டு அதனை நிதியத்தின் திரைப்படக் கையிருப்பில் உள்ளடக்கியிருந்தது.

## 3.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 268,533 செயற்பாடற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பும் நல்ல ஆளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிறக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டும் உள்ளடக்கப்படுமாறு கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படாததுடன் அடுத்துவரும் ஆண்டுகளுக்கெனத் அதனைத் தயாரிக்கப்பதிலும் கவனஞ் செலுத்தப்படவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் திரைப்படக் கூட்டுத்தாபன உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வுக் குழுக்கள்

கணக்காய்வுக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்திற்காக பாதீடொன்று தயாரிக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் அறவீடு

(ஆ) தண்டப்பணம்